10 ஆம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கான ‘மூளைக்காய்ச்சல் ACWY தடுப்பூசி’

முக்கியத் தகவல்கள் 2024

பாடசாலைத் தடுப்பூசிகளுக்கு இணையம் மூலமான ஒப்புதல் வசதி கிடைக்கிறது

பெற்றோர்களும் பாதுகாவலர்களும் தங்கள் பிள்ளை 10 ஆம் ஆண்டு படிக்கும் போது அவர்களின் வழக்கமான பள்ளி தடுப்பூசிகளுக்கு இணையம் மூலம் ஒப்புதல் அளிக்கலாம்.

உங்களிடம் இருக்க வேண்டியவை:

1. உங்கள் Service NSW log-in (உள்நுழைவு) விவரங்கள்
2. உங்களதும் உங்கள் பிள்ளையினதும் ‘மெடிகெயர்’ அட்டை எண் (உங்கள் இருவருக்கும் இருந்தால்)
3. உங்கள் பிள்ளை 2024 இல் எந்த மேல்நிலைப் பாடசாலையில் படிக்கிறார் என்பது பற்றிய விவரங்கள்.

‘NSW பாடசாலைத் தடுப்பூசி திட்டம்’ பற்றிய கூடுதல் தகவலுக்கு, தரிசிக்க: health.nsw.gov.au/schoolvaccination

இணையம் மூலம் ஒப்புதலை வழங்க தரிசிக்க: https://engage.health.nsw.gov.au/engage

மேலதிகத் தகவல்கள்:

‘மூளைக்காய்ச்சல் (மெனிங்கோகோகல்) ACWY’ தடுப்பு மருந்தளித்தல்

Meningococcal ACWY vaccination

பெற்றோருக்கான தகவல் ஏடு

பாடசாலையிலான தடுப்பு மருந்துதளிப்புத் திட்டத்தின் கீழ் ‘தேசிய சுகாதார மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில்’ இனால் பதின்ம வயதினருக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை நி.ச.வே. சுகாதாரம் வழங்குகிறது. கையொப்பமிடப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் இணக்கம் வழங்கப்படுவது அவசியம்.

உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள்:

- இத்தகவல் ஏட்டை கவனமாக வாசிக்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு மூளைக்காய்ச்சல் ACWY தடுப்பூசி அளிக்கப்பட வேண்டுமென நீங்கள் விரும்பினால், உங்கள் ஒப்புதலை இணையம் மூலமாக வழங்கவும், அல்லது உங்கள் பள்ளியில் இருந்து கடதாசித் தாள் மூலமான ஒப்புதல் படிவத்தைக் கேட்கவும்.
- உங்கள் பிள்ளைக்கு ‘மூளைக்காய்ச்சல் ACWY’ நோயிற்கெதிரான தடுப்பு மருந்து வழங்கப்படுவதை நீங்கள் விரும்புவதில்லையாயின் இணக்கப் படிவத்தை நிரப்பவோ அதனைக் கையளிக்கவோ வேண்டாம்.

கே. பாடசாலையிலான தடுப்பூசிக்கு நான் எப்படி ஒப்புதல் அளிப்பது?

இணையம் மூலமாக ஒப்புதலை வழங்க, உங்களுக்குப் பின்வருவன தேவைப்படும்:

1. உங்கள் Service NSW log-in (உள்நுழைவு) விவரங்கள்
2. உங்களதும் உங்கள் குழந்தையினதும் ‘மெடிகெயர்’ அட்டை எண் (உங்கள் இருவருக்கும் இருந்தால்)

- உங்களுக்கோ அல்லது உங்கள் பிள்ளைக்கோ ‘மெடிகெயர்’ அட்டை இல்லையென்றால், காகிதம் மூலமான ஒப்புதல் படிவத்தைக் வேண்டுவதன் மூலம் ஒப்புதல் வழங்கப்படலாம் (பாடசாலைகளில் கேட்டுப் பெறலாம்).

கே. நான் ஒப்புதலை திரும்பப் பெறலாமா?

தடுப்பூசி இடுவதற்கு முன்பு பெற்றோர்கள் எந்த நேரத்திலும் ஒப்புதலை மீளப் பெறலாம்.

இணையம் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால், பாதுகாப்பான NSW Health ஆன்லைன் ஒப்புதல் ‘வலைவாசல்’ (portal) இல் உள்நுழைந்து, ஒப்புதலை திரும்பப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றவும்.

கடதாசி ஒப்புதல் படிவத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டால், மாணவ மாணவியின் பெயர், பாடசாலை வகுப்பு மற்றும் எந்தத் தடுப்பூசிகளுக்கான ஒப்புதல் மீளப்பெறப்படுகிறது என்றும் பாடசாலைக்கு எழுதவும் அல்லது தொலைபேசியில் அழைத்துத் தெரிவிக்கவும்.

கே. மூளைக்காய்ச்சல் நோய் என்பது என்ன?

மூளைக்காய்ச்சல் (meningococcal) நோய் என்பது ஒரு அரிதான ஆனால் பாரதூரமான தொற்றுநோய், இது வழமையாக மூளைச்சவ்வு (meningitis) வீக்கத்திற்கும் (முதுகந்தண்டு வடம் மற்றும் மூளையின் அக உறை வீக்கம்) மற்றும்/அல்லது குருதிநுண்ணுயிர் நச்சேற்றலுக்கும் (இரத்தம் நஞ்சாதல்) இட்டுச் செல்லும்.

மூளைக்காய்ச்சல் நோயின் அறிகுறிகள் குறிப்பிடத்தக்கவையாக இல்லாமலிருக்கலாம் எனினும் திடீரென ஏற்படும் காய்ச்சல், தலைவலி, கழுத்து விறைப்பு, மூட்டு வலி, சிவப்பு-ஊதா நிறப்புள்ளிகளை அல்லது சிராய்ப்புகளைக் கொண்ட தோல்தடிப்பு, பிரகாசமான ஒளியில் பிடித்தமின்மை, குமட்டல் மற்றும் வாந்தி என்பன அவற்றில் உள்ளடங்கலாம்.

தகுந்த நோயெதிர்ப்புச் (antibiotic) சிகிச்சை வழங்கப்படினும், 10 சதவீதம் வரையிலான தொற்றுக்கள் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியன, அத்துடன் உயிர் பிழைப்போர் நீண்ட காலக் கோளாறுகளுக்கு உட்படக்கூடும்.

கே. மூளைக்காய்ச்சல் நோய் எவ்வாறு பரவுகிறது?

மூக்கினதும் தொண்டையினதும் பிற்பகுதியிலிருந்து வரும் உமிழ் நீர் மூலமாக மக்களுக்கிடையில் மூளைக்காய்ச்சல் நுண்ணுயிர்த் தொற்று பரவுகிறது. பொதுவாக இந்த நுண்ணுயிரைச் சுமந்திருக்கும் ஒருவருடன், அத்தகையவர் பொதுவாக நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கவும் கூடும், மிக நெருக்கமானதும் நீண்டதுமான தொடர்பில் இருக்கும் ஒருவருக்கு நோய்க்கிருமி காவுகின்றது. ‘நெருக்கமானதும் நீண்டதுமான தொடர்புக்கு’ உதாரணமாக ஒரே வீட்டில் குடியிருப்பதையும் அல்லது அந்தரங்கமான (ஆழமான) முத்தத்தில் ஈடுபடுவதையும் கூறலாம். மூளைக்காய்ச்சல் நுண்ணுயிர்கள் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு இலகுவாகப் பரவுவதில்லை அத்துடன் அவை மனித சரீரத்திற்கு வெளியே அவ்வளவாக உயிரோடு இருக்காது.

கே. தடுப்பு மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்து சில தொற்றுக்களை எதிர்ப்பதற்கு நோய்த்தடுப்புச் சக்தியைத் தூண்டிவிடுவதன் மூலம் செயற்படுகின்றது. தடுப்பு மருந்து பெற்ற ஒருவர் இத்தொற்றுகளுடன் தொடர்புகொள்ள நேர்ந்தால் அவர்களுடைய நோய்த்தடுப்புச் சக்தி ஊக்கமான முறையில் எதிர்வினையாற்றி அந்த நோய் வளர்வதைத் தடுக்கின்றது அல்லது அதன் தீவிரத்தைப் பெரிதும் குறைக்கின்றது.

கே. 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்து எந்தளவுக்கு செயலூக்கமுள்ளவை?

ஒரு முறை வழங்கப்படும் 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்துக் கூட்டு, இந்த நான்கு வகையான மூளைக்காய்ச்சல் நோய்களுக்குமெதிரான பாதுகாப்பை வழங்குவதில் மிகவும் செயலூக்கம் உள்ளவை. Type B வகையினால் தோற்றுவிக்கப்படும் மூளைக்காய்ச்சல் நோயிற்கு இத்தடுப்பு மருந்து பாதுகாப்பளிக்காது.

கே. யாருக்குத் தடுப்பூசி அளிக்கப்பட வேண்டும்?

இடைநிலைப் பாடசாலைகளில் 10 ஆம் வகுப்புகளில் உள்ள சகல மாணவர்களுக்கும் மற்றும் துரித ஆங்கில வகுப்பு நிலையங்களுக்குச் செல்லும் 15 -19 வயதுடையவர்களுக்கும் மூளைக்காய்ச்சல் நுண்ணுயிர்த் தொகுதிகளாகிய A, C, W மற்றும் Y - இற்கெதிராக தடுப்பு மருந்தளிக்கப்பட வேண்டும்.

கே. யாருக்குத் தடுப்புமருந்து கொடுக்கப்படக் கூடாது?

பின்வரும் சந்தர்ப்பங்களில் கடும் ஒவ்வாமை (anaphylaxis) ஏற்பட்டுள்ளவர்களுக்கு 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்தளிக்கப்படுதல் கூடாது:

- முன்பொருமுறை மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்தளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடும் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளவர்களுக்கு
- ஏதாவதொரு தடுப்பு மருந்துக் கூறு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடும் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளவர்களுக்கு

தொண்டை அழற்சி டோக்சோயிட் (diphtheria toxoid) இற்றிற்கு கூருணர்வு உள்ளவர்களுக்கும் 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்து அளிக்கப்படல் கூடாது.

கே. அனபிலக்ஸிஸ் என்றால் என்ன?

அனபிலக்ஸிஸ் என்பது ஒரு தீவிரமான ஒவ்வாமை எதிர்வினையாகும். உடனடியான பரிகாரம் இல்லாவிட்டால் மயக்கமும் மரணமும் சம்பவிக்கமுடியும்.

ஏதாவது தடுப்பு மருந்தேற்றலின் பின் இது மிக அரிதாக ஏற்படுகின்றது. பாடசாலை நோய்த்தடுப்புத் தாதிகள் அனபிலக்ஸிஸ் சிகிச்சையில் முழுப் பயிற்சி பெற்றவர்களாவர்.

கே. எனது பிள்ளைக்கு ஏற்கனவே 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்து வழங்கப்பட்டதில்லையா?

2018 ஜூலை முதல் 12 மாத வயதையுடைய சிறுவர்களுக்கு 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்து 'தேசிய தடுப்பு மருந்தளிப்புத் திட்ட'த்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. உங்கள் பிள்ளை ஏற்கனவே 'மூளைக்காய்ச்சல்-C' தடுப்பு மருந்தைப் பெற்றிருக்கலாம். அது 'மூளைக்காய்ச்சல்-C' யிலிருந்து மட்டுமே பாதுகாப்பளிக்கும்.

குறிப்பிட்ட சில மருத்துவ நிலைமைகளைக் கொண்ட (மண்ணீரல் இல்லாமை அல்லது நோயெதிர்ப்புத் திறன் குறைபாடுடையோர்) குறைந்தளவு எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு ஏற்கனவே இத்தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறிருப்பின், உங்கள் GP - யுடனோ, அல்லது உங்கள் பிள்ளை ஒரு செயலூக்கியைப் (booster) பெற வேண்டியிருப்பின் ஒரு சிறப்பு மருத்துவருடனோ கலந்துரையாடவும்.

கே. எனது பிள்ளை ஏற்கனவே 'மூளைக்காய்ச்சல் C' தடுப்பு மருந்தைப் பெற்றுள்ளது. மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்தைப் பெறுவது பாதுகாப்பானதா?

அநேகமான பிள்ளைகள் குழந்தைகளாக இருந்த போது 'மூளைக்காய்ச்சல் C' தடுப்பு மருந்தைப் பெற்றிருப்பார்கள்.

சில நாடுகளில் விடலைப் பருவ செயலூக்கி பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் இந்த ACWY' தடுப்பு மருந்து 'மூளைக்காய்ச்சல்-C' யிற்கெதிராகவும் அவ்வாறே A, W மற்றும் Y வகைகளுக்கெதிராகவும் ஒரு முறை வழங்கப்படும் செயலூக்கியையும் வழங்கும். சில சிறுவர்கள் 2015 -2018 இல் 'No Jab, No Pay' என்ற (ஏற்கனவே தவறியவர்களுக்குக்காக மீண்டும் தடுப்பு மருந்து வழங்கப்படும்) திட்டத்தின் படி ஒரு முறை வழங்கப்படும் தடுப்பு மருந்தைப் பெற்றிருப்பார்கள். ஒரு முறை வழங்கப்படும் 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்பு மருந்தை இப்போது பெற்றுக்கொள்வது பாதுகாப்பானது. சகல வகையான மூளைக்காய்ச்சல் நோய்களுக்குமெதிரான சிறந்த பாதுகாப்பைப் பெற 4 வார இடைவெளியில் இந்தத் தடுப்பு மருந்து அளவுகளைப் பெற்றுக்கொள்வது விரும்பத்தக்கதாகும்.

கே. இந்தத் தடுப்பு மருந்தின் அவசியத்திற்கான ஏனைய காரணங்கள் யாவை?

'ஹஜ்' உட்பட மூளைக்காய்ச்சல் நோயின் பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடிய ஆபத்து அதிகம் உள்ள பிரயாணங்களில் ஈடுபட திட்டமிட்டுள்ளவர்களுக்கும் இத்தடுப்பு மருந்து பரிந்துரைக்கப்படுகிறது. நுண்ணுயிரியல் ஆய்வுகூட ஊழியர்கள் போன்ற சில குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடுவோருக்கும் மற்றும் மண்ணீரல் இல்லாமை போன்ற சில மருத்துவ நிலைமைகள் உள்ளோருக்கும் இத்தடுப்பு மருந்து பரிந்துரைக்கப்படுகிறது.

கே. 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்புமருந்து என்ன சேர்க்கைகளைக் கொண்டுள்ளது?

இத்தடுப்பு மருந்து (ட்ரோமேடமோல் (trometamol), கரும்புச்சக்கரை (sucrose) மற்றும் உவர்மப் பாசிகம் (sodium chloride) சேர்க்கைகளைக் கொண்டிருக்கலாம். தடுப்புமருந்து செயற்படுவதற்கு உதவியாக அல்லது ஒரு பேணியாகச் செயற்படுவதற்காக இச்சேர்க்கைகள் மிகச் சிறிய அளவில் உள்ளடக்கப்படுகின்றன.

கே. தடுப்புமருந்துகள் எந்தளவு பாதுகாப்பானவை?

அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படும் தடுப்புமருந்துகள் பாதுகாப்பானவை. அவை 'சிகிச்சை மருந்துகள் நிர்வாக'த்தினால் (Therapeutic Goods Administration) (TGA) அனுமதிக்கப்படும் முன் தீவிரமான பாதுகாப்புப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். இதற்கு மேலாக இத்தடுப்புமருந்துகள் பயன்பாட்டிற்கு வந்ததும் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை TGA கண்காணிக்கிறது.

கே. 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்புமருந்தின் பக்கவிளைவுகள் யாவை?

பக்கவிளைவுகள் பொதுவாக மிதமானவை. பொதுவாக காய்ச்சல், தலைவலி, தலைச்சுற்றல் அல்லது வலி, ஊசி போடும் இடத்தில் வீக்கம் மற்றும் சிவத்தல் ஆகியவை அவற்றில் அடங்கும். ஊசி போடப்பட்ட இடத்தில் ஏற்படும் எதிர்வினைகள் பொதுவாக 2-3 நாட்களுக்குள் தீர்ந்துவிடும்.

தீவிரமான பக்க விளைவுகள் மிக அரிது. பக்க விளைவுகள் பற்றிய மேலதிக தகவல்கள் www.health.nsw.gov.au/schoolvaccination என்ற வலைத்தளத்தில் தடுப்பு மருந்து பற்றிய 'நுகர்வோர் மருந்து தகவல்' இல் கிடைக்கும்.

தடுப்பு மருந்தளிக்கப்பட்டதன் பின்பு ஏற்படக் கூடுமான பக்க விளைவுகள் பற்றி கரிசனைப் படும் பெற்றோர்கள் தமது GP - யைத் தொடர்புகொள்ளவும். அவர் உள்ளூர்ப்பகுதி பொதுச் சுகாதார அலகிற்கு ஒரு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

கே. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் ஒரு மாணவிக்கு தடுப்புமருந்து கொடுக்கலாமா?

இல்லை. கருத்தரித்த அல்லது கருத்தரித்திருக்கக்கூடும் என்று நினைக்கும் எந்த ஒரு மாணவிக்கும் தடுப்புமருந்து கொடுக்கக் கூடாது. தடுப்புமருந்து கொடுக்கும் நாளில் மாணவிகளிடம் அவர்கள் கருவுற்றுள்ளார்களா அல்லது கருவுற்றிருக்கும் வாய்ப்பு உண்டா என்று மருந்தேற்றும் தாதி கேட்பார். மாணவி ஆம் என்று பதில் சொன்னால் அவருக்கு மருந்தேற்றப் படமாட்டாது. அதுபற்றி பெற்றோர்/பாதுகாவலருடன் உடனடியாகக் கலந்துரையாடும்படி அவர் தூண்டப்படுவார். அவருக்கு ஆலோசனையும் உதவியும் வழிகாட்டுதலும் தரக்கூடிய மருத்துவ சேவையின் தொடர்பு விபரங்களும் அவருக்குக் கொடுக்கப்படும்.

கே. எனது பிள்ளைக்கு ஆஸ்த்துமா நோயிற்காக உறிஞ்சியின் மூலம் கோர்ட்டிசோன் (cortisone) அல்லது பிரட்னிசோன் (prednisone) எடுப்பவராயின் அவருக்கு என்ன நடக்கும்?

ஆஸ்த்துமா உள்ள ஒருவருக்கு அவர் எந்த மருந்து பாவிப்பவராயினும் பாதுகாப்பான முறையில் 'மூளைக்காய்ச்சல் ACWY' தடுப்புமருந்து கொடுக்கக்கப்பட முடியும்.

கே. தடுப்பு மருந்தேற்றத்துக்கு தாதிமார்கள் வருகை தரும் தினத்தில் எனது பிள்ளை பாடசாலைக்கு வராமையால் அல்லது சுகயீனம் காரணமாக தடுப்பு மருந்தேற்றத்தைத் தவற விட்டிருந்தால் நான் என்ன செய்வது?

தடுப்பூசியை பாடசாலையில் பெறத் தவறினால், கூடிய விரைவில் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் தங்கள் உள்ளூர் GP-யை அல்லது மருந்தாள(pharmacist)ருடன் தொடர்பு கொண்டு தடுப்பூசியைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

கே. தடுப்பூசிகள் பற்றிய பதிவேட்டினை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது?

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகளைப் பற்றிய தகவல்கள் 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்பு பதிவேடு' (AIR)-இல் பதிவேற்றப்படும். அதன் மூலம் உங்கள் பிள்ளையின் தற்போதைய நோய்த்தடுப்பு வரலாற்றுடன் அது இணைக்கப்படும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தை 14 வயதை அடையும் வரை எந்த நேரத்திலும் தங்கள் குழந்தையின் 'AIR நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கை'யின் நகலைக் கோரலாம், மேலும் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையை பின்வருமாறு கோரலாம்:

- 'மெடிகெயர்' ஆன்லைன் கணக்கைப் பயன்படுத்தி myGov my.gov.au/ என்ற வலைத்தளத்தில்
- 'மெடிகெயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' (Medicare Express Plus) என்ற செயலி (App)-யைப் பயன்படுத்தி servicesaustralia.gov.au/express-plus-mobile-apps
- 'AIR பொது விசாரிப்பு இணை'ப்பை 1800 653 809-இல் அழைப்பதன் மூலம்.

கே. என் பிள்ளையைப் பற்றிய தகவல்களை என்ன செய்வார்கள்?

இணக்கப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள், NSW மற்றும் கொமன்வெல்தின் சட்டவாக்கத்திலுள்ள இரகசியம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புகள் சட்டங்களுக்கு உட்பட்டவை (இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தரங்கக் கூற்றினைப் பார்க்கவும்). உங்கள் பிள்ளையின் ஏற்கனவேயுள்ள தடுப்புமருந்தேற்றல் வரலாற்றுடன் இத்தகவல்கள் இணைக்கப்படுவதை இயலுமாக்குவதற்கும் MyGov இல் அவற்றைப் பார்ப்பதற்கும் 'நியு சவுத் வேல்ஸ் (NSW) சுகாதார நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் அவை பதிவுசெய்யப்பட்டு பின்பு 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவே'ட்டில் (AIR) பதிவேற்றம் செய்யப்படும்.

பாடசாலை நோய்த்தடுப்பூசி பற்றிய மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்?

மேலதிக தகவல்கள்:

- NSW சுகாதரத்தின் பின்வரும் வலைத்தலத்தில் www.health.nsw.gov.au/schoolvaccination
- உங்கள் பிரதேச பொதுச் சுகாதாரப் பிரிவினரை 1300 066 055-இல் தொடர்புகொள்வதன் மூலம்

Tamil

‘மூளைக்காய்ச்சல் ACWY’ தடுப்பு மருந்தளிப்பிற்கான இணக்கம்

NSW GOVERNMENT

பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும். **நீல** அல்லது **கருப்பு** மைப் பேனையால் **தடித்த** எழுத்தில் எழுதவும்.

1. மாணவரின் விபரங்கள்

குடும்பப் பெயர்

இட்ட பெயர்/கள்

பிறந்த திகதி __ __ / __ __ / 2 0 __ __

பால்: ☐ ஆண் ☐ பெண் ☐ உறுதியற்ற/இன்டர்செக்ஸ்/குறிப்பிடப்படாதது

வகுப்பு

பாடசாலையின் பெயர்

மெடிகெயர் இலக்கம்

☐ மெடிகெயர் அட்டையில் உமது பிள்ளையின் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள எண்

2. பூர்வகுடியினர் தகுநிலை

☐ இல்லை ☐ ஆம். அபோரிஜினல் ☐ ஆம். டோரஸ் நீரிணை தீவுவாசி ☐ ஆம். அபோரிஜினல் மற்றும் டொரஸ் தீவு வாசி இரண்டும்

3. உங்கள் விபரங்கள் - பெற்றார் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்

‘மூளைக்காய்ச்சல் ACWY’ தடுப்பு மருந்தின் பிரயோசனம் மற்றும் ஏற்படக் கூடுமான பக்க விளைவுகளைப் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக் கொண்டேன்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எனது பிள்ளைக்கு ‘மூளைக்காய்ச்சல் ACWY’ தடுப்பு மருந்தின் ஒரு டோஸ் அளவையைப் பெறுவதற்கு இத்துடன் சம்மதம் வழங்குகிறேன்.

நான் அறிந்த மட்டில் எனது பிள்ளையின் நிலை என்னவெனில்:

1. எனது பிள்ளைக்கு எந்த தடுப்பு மருந்துக்கும் எதிர் வினையாக கடுமையான ஒவ்வாமை (anaphylactic reaction) வந்தது கிடையாது.
2. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ‘பெற்றோருக்கான தகவல்’ ஏட்டில் தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டுள்ள எந்த ஒவ்வாமை நிலைமையும் எனது பிள்ளையிடம் கிடையாது.
3. கர்ப்பமாக இல்லை.

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் (உ.ம் JOHN SMITH)

வீட்டு முகவரி (உ.ம். 5 SMITH LANE)

புறநகர்

அஞ்சல் குறியீடு

கைத் தொலைபேசி எண்

மிகப் பொருத்தமான மாற்று தொலைபேசி எண் (பிரதேச குறியீட்டுடன் உ.ம்.02)

மின்னஞ்சல் முகவரி

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

✕

திகதி __ __ / __ __ / 2 0 __ __

மாதிரி மட்டுமே
சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்

NSW GOVERNMENT

230688-2-22

மூளைக்காய்ச்சல் ACWY தடுப்பு மருந்தளிப்புப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும் (இந்த விவரங்கள் 'மெடிகெயர்' அட்டையில் காட்டப்பட்டுள்ள விவரங்களுடன் பொருந்த வேண்டும்)

மாணவரின் பெயர் (உ.ம். JANE SMITH)

____

அலுவலக பாவனைக்கு மட்டும்

புயம் ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ×

திகதி __ __ / __ __ / 2 0 __ __

தாதியின் குறிப்புகள்

தடுப்புமருந்தேற்றாததற்குக் காரணம்

- ☐ வராமை
- ☐ இணக்கமின்மை
- ☐ சுகயீனம்
- ☐ கையொப்பமின்மை
- ☐ இணக்கம் திரும்பப்பெறப்பட்டது
- ☐ வேறு

பெற்றோர்/பாதுகாவலர்
மூளைக்காய்ச்சல் ACWY தடுப்பு மருந்தளிப்புப் பதிவு

மூளைக்காய்ச்சல் ACWY தடுப்பு மருந்தளிப்புப் பதிவு

✍ பெற்றோர்/பாதுகாவலர் நிரப்பவும்

மாணவரின் பெயர் (உ.ம். JANE SMITH)

____

அலுவலக பாவனைக்கு மட்டும்

புயம் ☐ இடது ☐ வலது

தடுப்பூசி ஏற்றிய நேரம் (24 மணி நேரம்) __ __ : __ __

வக்சின் தொகுதி இலக்கம்

தாதியின் கையொப்பம் ×

திகதி __ __ / __ __ / __ __ __ __

தடுப்பூசி வழங்கிய பின்னர் செய்ய வேண்டியது

- பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அவசியப்படும் என்பதால் இந்தப் பதிவைப் பேணிக் காக்கவும்.
- உங்கள் குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய தகவல்கள் தானாகவே 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' (AIR) பதியப்படும். தடுப்பூசித் தேதி குறித்து உங்கள் GP இடம் தெரிவித்துப் புதுப்பித்துக் கொள்வதற்கான தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம்.

ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் ஓர் எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது

- மிருதுத் தன்மையைப் போக்க ஊசியேற்றிய இடத்தில் குளிர்ந்த ஈரத் துணியை வைக்க.
- நோவு இருப்பின் பரசிடமோல் உட்கொள்ளவும்.
- அதிகமாக நீராகாரம் அருந்தவும்.

நீர் கவலைப்படும் அளவுக்கு உமது பிள்ளையில் எதிர் வினையாற்றலை அவதானித்தால் உமது பகுதி வைத்தியரை உடனே நாடவும்.

NSW GOVERNMENT

சம்மதப் படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பவும்